# ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு சிசில் மறுப்பு!

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 14 இதழ் 16
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 26-2-1995

(கொழும்பு)

அரசாங்கத்தால் சுமத்தபட்டுள்ள ஊழல், மோசடிகள் ஆகிய குற்றச் சாட்டுகளை நான் நிராகரிக்கிறேன் என்று முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன பி. பி. சி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: நான் இந்த ஊழல்களில் சம்பந்தப்படவில்லை. என் கை சுத்தமானது என்மீது சுமத்தபபட்ட குற்றச் சாட்டுகள் ஒரு சிலரால் எனக்கு எதிராக சோடிக்கபட்டவை.

படையிருக்கு உணவு வழங்கும் விடத்தில் எனது முயற்சியால் பல லட்ச ரூபாய் மிச்சம் பிடிக்கபபபட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## சமாதானப்பேச்சுக்கு சீனாவும் வரவேற்பு

(பீக்கிங்)

இலங்கை அரசாங்கத்திற்கும விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தற்போது நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தையை சீனா வரவேற்றுள்ளது.

நல்லெண்ண விஜயம் மேற்கொண்டு சீனா சென்ற இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் சீன அமைச்சர் நியான் கிச்சிங் தெரிவித்துள்ளார்.

மேலும் இன விவகாரம் தொடர்பாக சந்திரிகா பண்டாரநாயக்கா விஜயதுங்க மேற்கொள்ளும் முயற்சிகளையும் சீனா வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

க-ரி

# பொய்பிரசாரத்தில் ஈடுபடும் அரசின் நேர்மையில் எமக்கு பெரும் சந்தேகம் எழுகிறது

## தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

அரசின் நேர்மையிலும் உண்மையிலும் எமக்கு பெரியதொரு சந்தேகமே எழுந்துள்ளதாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு, சு. ப. தமிழ்ச்செல்வன் நேற்று நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

தற்போதைய நிலை தொடர்பாகவும் ஜனாதிபதியின் செயலர் திரு பாலபத்தபெண்டி விடுதலைப்புலிகளுக்கு அனுப்பிய கடிதம் தொடர்பாகவும் பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளித்த அவர் மேலும் கூறியதாவது;

பரஸ்பர நம்பிக்கையில் நடாத்தப்படவேண்டிய பேச்சுவார்த்தை ஒழுங்கான முறையில் நடாத்தாமல் நாம் ஏற்கனவே கூறுவது போல் அவசரப்பட்டு ஓடிவந்து இங்கு பேசுவதும் பின் ஓடுவதும் கடந்த 45 நாட்களாக 4ம் கட்ட பேச்சுவார்த்தைக்கு வராமல் ஒழித்து நிற்பதும், நாம் திரும்பத் திரும்ப கடிதங்கள் அனுப்பியும் அவர்கள்

(2ம் பக்கம் பார்கக)

## சுழிபுர கடலில் மீனவர் படையினரால் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மீண்டும் ஒரு போர் இடைநிறுத்த மீறலாக சுழிபுரம் கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு பத்து மணியளவில் சுழிபுரம் சவுக்கடி என்னுமிடத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடற்கரையிலிருந்து சுமார் முக்கால் மைல் தூரத்தில் வைத்து கடற்படையிரைால் தாக்கப்பட்டடனர்.

வேகப்படகுகள் மூலம் வந்த கடற்படையினர் கட்டுமரங்களிலிருந்து கடலில் வலை விரித்து இருந்த மீனவர்கள்

(2ம் பக்கம் பார்க்க)

## பூநகரிமுகாமை அகற்றினால் இருபாதையையும்திறக்கலாம்

[யாழ்ப்பாணம்]

பூநகரி படை முகாம் அகற்றப்பட்டு அப்பாதை திறக்கப்பட்டால பூநகரிப் பாதையையும் ஆனையிறவுப் பாதையையும் திறக்க நாம் தயாராயுள்ளோம்.

இவ்வாறு திரு. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்.

இதனை நாங்கள் ஆரம்பத்திலிருந்தே கூறிவருகிறோம். இநத விடயத்தில் எமது கோரிக்கையை கருத்தில் எடுக்காமல் இரு பாதையையும் திறந்து விட்டோம்என்று அரசு உண்மைக்குமாறான பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறது.

பாதை திறப்பு விடயம் குறித்து நாம் இதுவரை நடைபெற்ற பேச்சுக்களில் எல்லாம் அரசு தரப்பினரிடம் நன்கு தெளிவுபடுத்திவிட்

(4ம் பக்கம் பார்க்க)

## இரு ஜெனரேற்றர்கள் கப்பலில் வருகிறது

[கொழும்பு]

யாழ். நகருக்கு மின்சாரம் வழங்குவதற்காக இரு ஜெனரேட்டர்களை ஏற்றிக்கொண்டு 'லங்கா முடிதா' கப்பல்இன்று பருத்தித்துறை துறைமுகத்துக்கு வருகின்றது.

இக்கப்பலில் அரிசி, பால்மா பருப்பு உட்பட 2700 மெற்றிக்தொன் அத்தியாவசிய உணவுப் பொருட்களும் இருப்பதாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

விமரி

## வெளிநாட்டு உதவியைபெற அரசு பொய்ப்பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு உதவி வழங்கும நாடுகளின் மாநாடு எதிர்வரும் ஏப்ரல் மாதம் பாரிசில் நடைபெறவுள்ளதால் அம்மாநாட்டில் பெருமளவு நிதியுதவியை பெறும் நோக்கில் இலங்கை அரசு பொய்ப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகிறது,

இவ்வாறு திரு. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்;

யாழ். குடாநாட்டிற்கான் பாதை திறக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத் தடை நீக்கப்பட்டுள்ளது. மின்சாரம் வழங்கப்படுகிறது: புனர்நிர்மாண வேலைகள் பல கோடி ரூபாவில் செய்யப்படவுள்ளதாகஅரசுகூறிவருகின்றபோதிலும் அதில் எதுவுமே ஆரம்பிக்கப்படவில்லை. உதவி வழங்

(4ம் பக்கம் பார்கக)

## இந்திய இலங்கை படைகளினால் 448 மாணவர் உயிரிழப்பு

[யாழ்ப்பாணம்]

இந்திய - சிறிலங்கா படையினரின் தாக்குதல்களினால் யாழ். மாவட்டத்தில் 7 உதவி அரச அதிபர் பிரிவுகளில் 448 பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்நுள்ளனர்.

உதவி அரச அதிபர் பிரிவுகளில் கொல்லப்பட்ட மாணவர் விபரம் வருமாறு:

சண்டிலிப்பாய் 29, யாழ்ப்பாணம் 65, சங்கானை 39, கரவெட்டி 18, கோப்பாய் 145, தெல்லிப்பழை 49, உடுவில் 48 ஏனைய உதவி அரச

(4ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு துறைக்கு உதவ ஆலோசனைக் குழு நியமனம்

(கொழும்பு)

பாதுகாப்பு துறையை வழிநடத்த உதவும்பொருட்டு அரசு ஆலோசனைக் குழு ஒன்றை நியமிக்கவுள்ளது. இதில் இராணுவம், கடற்படை, பொலிஸ் ஆகியவற்றிருந்து ஓய்வுபெற்ற சிறப்பு வாய்ந்த அதிகாரிகள் இடம் பெறுவார்கள்என உத்தியாக பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

சிவில் அதிகாரி ஒருவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்

[4ம் பக்கம் பார்க்க]

## பொலிஸ் நிலையம் பலப்படுத்தப்படுகிறது

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை பொலிஸ் நிலையம் பலப்படுத்தப்பட்டு வருகின்றது

பொலிஸ் நிலையத்தை சூழ மண்மூடைகள் அடுக்கப்பட்டுள்ளன. காவலரண்களும புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. ஒரு சில தினங்களாகப் பொலிசார் இந்தப் பலப்படுத்தும் நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்கள்.

இதேவேளை சம்மாந்துறை பொலிஸ் நிலையமும் பலப்படுத்தப்பட்டு வருகின்றது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

[ம-சி]

## வரி விளம்பரம்

**ஆங்கிலம் கணிதம் - 95**

O/L Distinctiou, Cr:dit பெறுபேறடைய வாரம் ஒவ்வொரு பாடத்திலும் 5 மணித்தியாலம். அனுபவமுள்ள B. Sc. ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, மணல்தறை லேன், திருநெல்வேலி.

(C-1401)

**யாருடையது?**

(யாழ்ப்பாணம்)

யாழ். மூளாய் சேவையில் ஈடுபட்ட சிற்றூர்தியில் திரு பொன் சாம்பசிவம் என்பவரால் கண்டெடுக்கப்பப்பெற்ற சிறு கைச்சங்கிலி ஒன்று யாழ் மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்க இணையக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளலாம்,

# பொய்ப்பிரசாரத்தில்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்கு வராமல் நிற்பதும் அதுவுமல்லாமல் கடிதம் மூலம் பதில்களை எழுதுவதும் அங்கு பத்திரிகைகளுக்கு புலிகள் தான் பேச்சுக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள். புலிகள் பேச்சுக்கு வருகிறார்களில்லைசமாதான கமிட்டியை கூப்பிடுகிறார்கள் இல்லைஎனக் கூறி முழுப் பழியையும் எம் மீது சுமத்துவதை நாம் ஒட்டு மொத்தமாக பார்க்கும் போது அரசின் நேர்மையில் எமக்கு பெரும் சந்தேகக் குறி எழுந்துள்ளது.

### பாலபத்த பெண்டி கடிதம்

ஜனாதிபதியின் செயலரும். சமாதானப் பேச்சில் பங்குபற்றிய அரச பிரதிநிதிகள் குழுவின் தலைவருமான திரு. பாலபத்த பெண்டி நேற்று கடிதம் ஒன்றை எமக்கு அனுப்பி வைத்துள்ளார். இக்கடிதத்தில் ஆனையிறவுப் பாதையும், பூநகரிப் பாதையும் பொது மக்களின் போக்குவரத்திற்காக திறந்து விடப்பட்டுள்ளது. சங்குப்பிட்டியிலிருந்து இராணுவம் 500 மீற்றர் தூரம் தள்ளி நிற்கும் இதனூடாக பொதுமக்கள் பயணம் செய்யமுடியும் பொருளாதார தடைகள் நீக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் அன்றாடத் தேவை என்ற பிரச்னைகள் எல்லாம் தீர்க்கப்பட்டுவிட்டன, இனி புலிகளே அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

### மக்கள் குழப்பம்

கடந்த இரு நாட்களாக இலங்கை வானொலியில் இராணுவ பொருட்கள் அல்லாத பொருட்களின் தடைகள் தளர்த்தப்பட்டுள்ளதாகவும் பூநகரி-ஆனையிறவு பாதைகள் திறக்கப்பட்டிருப்பதாக அரசு பெரிய அளவில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது. இது மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இப்படியானதொரு சூழ்நிலையை அரசு ஏற்படுத்தியுள்ளது. விடுதலைப் புலிகள் இதற்கு ஒரு பதிலும் கூறவில்லை என்றுஒரு குழப்பம் உள்ளது' இதில் எதுவித உண்மையும் இல்லை என்பதை நாங்கள் எமது மக்களுக்கு தெரிவிக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

### பிரசார யுக்தி

பூநகரி முகாமைப் பொறுத்தவரை 3 கட்டப் பேச்சுக்களிலும் இது குறித்து பேசப்பட்டது. அதாவது இராணுவ முகாமை சிறிது தூரம் பின் தள்ளி பாதையை திறப்பதாக கூறியிருந்தனர். எனினும் அது சாத்தியப்படாதொரு விடயம். இது பற்றி நாம் அவர்களுக்கு விரிவாக விளக்கியிருந்தோம். இதனை அவர்களும்ஏற்றுக் கொண்டு போனார்கள்.

எனினும் அங்கு போய் நாலாம் கட்டப் பேச்சுக்கு வராமல் 3 கட்டப் பேச்சுக்களிலும் கதைத்துப் பேசியவிடயங்களைஎல்லாம் மூடிமறைத்து சமாதானப் பேச்சை புறம் தள்ளிவைத்து விட்டு, பாதையை திறந்துள்ளதாகவும், புனர் வாழ்வுப் பணிகளை ஆரம்பிக்கப் போவதாகவும், பொருளாதாரத் தடை நீக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கிறார்கள். ஆனால் இதில் எதுவுமே நடைபெறாமல் பத்திரிகைகளிலும் வானொலியிலும் வரும் வெறும் பிரசார யுக்தியாகவே கருதுகிறோம் இதனை மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

முதலில் மக்களின் அத்தியாவசிய தேவையான எரிபொருள், மோட்டார் உதிரிப்பாகங்கள், உரவகைகள், விவசாயப் பொருட்கள், பற்றறிகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு தொடர்ந்தும் தடை இருநதுகொண்டேயிருக்கிறது. அதை நீக்கவேண்டுமென கடந்த 3 கட்டப் பேச்சுக்களிலும் வலியுறுத்தி வருகிறோம். குறிப்பாக எரிபொருளானது மக்களின் சமூக. பொருளாதார வாழ்விற்கு அத்தியாவசியமானது.

### இராணுவம் தடை

மேலும் ஏற்கனவே தடை நீக்கப்பட்டதாகக் கூறப்படும் பொருட்கள் கூட இங்கு வருவதில்லை இது சகலரும் அறிந்த விடயம். இராணுவம் வவுனியாவில் வைத்து இவற்றை இங்கு கொண்டு வருவதற்கு தடைகளைப் போட்டு வருகிறது இப்படியானதொரு சிக்கலான சூழ்நிலையிலும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காத நிலையிலும் எரிபொருள் தட்டுப்பாடு உள்ள நிலையில் அரசு மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான சகலவற்றையும் அனுமதித்து விட்டதாக திடீரென அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் இன்னமும் முழுமையானதொரு யுத்த நிறுத்தமாக மாற்றம் பெறவில்லை. இதில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகளில் கூட பல பிரச்னைகள் உள்ளன, குறிப்பாக கடலில் நடமாட்டம், கிழக்கில் போராளிகளின் நடமாட்டம், கண்காணிப்புக் குழுக்களை நியமித்தல் போன்ற பிரச்னைகள் எதுவும் தீர்க்கப்படவில்லை. அப்படியிருக்க திரு. பாலபத்தபெண்டி தமது கடிதத்தில் இங்கு சமாதான இயல்புநிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

### ஊழல் இடம்பெறக்கூடாது

புனர் நிர்மாணவேலை எனக் கூறி யாழ் மாநகரசபைக்குள் சில திருத்த வேலைகளை மேற்கொள்ளவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. அதாவது யாழ் நூல்நிலையத்தை மீள அமைத்தல், யாழ் ஆஸ்பத்திரியில் சில திருத்த வேலைகளை செய்தல்' யாழ். மாநகரசபைக்குள் மின்சாரம் வழங்கல் உட்பட சில வீதிகளை புனரமைக்கப் போவதாக அரசு கூறியுள்ளது.

நாம் 3ம் கட்டப் பேச்சுக்களின்போது இந்த வேலைகள் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி சீரமைப்பதற்கான ஒரு புனர் நிர்மாண அபிவிருத்திக் குழுவொன்று அமைக்கப்பட்டு அதில் புலிகளுக்கு சரிசம பங்களிப்பு கொடுக்கப்பட வேண்டும்.

வட-கிழக்கு மாகாணங்களுக்கான புனர் நிர்மாண நிதிகளை செம்மையான முறையில் செலவிடுவதற்காக ஒரு அபிவிருத்தி வங்கி ஒன்று அமைக்கப்படவேண்டும். அதன் பின்பே இந்த வேலைகள் நடைபெறவேண்டும் எனக் கூறியிருந்தோம். ஏனென்றால் வெளிநாடுகளிலிருந்து பெருமளவு நிதி கிடைக்கவுள்ளதால் இப்படியான பெருமளவநிதிஎமது மக்களுக்குகிடைக்கவேண்டும். அது இங்கு முழுமையாக பயன்பட வேண்டும் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஊழல்கள் நடைபெறக் கூடாது என்ற நோக்கங்களுக்காகவே நாம் இநத யோசனைகளை தெரிவித்திருந்தோம். அதற்கு அரச குழுவும் இணக்கம் தெரிவித்துச் சென்றது.

### மர்மம் இருக்கிறது

இப்போது அவையெல்லாவற்றையும் விடுத்து, மூடி மறைத்து சிறிய அளவில் அதுவும் வட-கிழக்கு மாகாணம் என்று வடக்கு மாகாணமாக சுருங்கி, வடக்குமாகாணம் யாழ்ப்பாணமாகசுருங்கி யாழ்ப்பாணம்யாழ். மாநகர சபையாகச்சுருங்கி விட்டது. இதில் ஏதோமர்மம் இருப்பதாகவே கருதுகிறோம்.

ஆகவே இந்த புனர் நிர்மாண வேலைகள் எனக் கூறி இவை இங்கு அனுமதிக்கப்பட்டால் இந்த பிரச்னை எல்லாவற்றையும் தட்டிக்கழித்து விட்டு பெருமளவு நிதியை துஷ்பிரயோகம் செய்வதாகவே அமையும்.

### போர்நிறுத்தம் உருவாக வேண்டும்

ஆகவே நாம் தற்போது அரசிடம், பேச்சுவார்த்தையில் எடுத்துக் கொள்ளப்பட்ட விடயங்களின் அடிப்படையில் பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும் அதாவது முதலாவதாகமோதல் தவிர்பபு உடன்பாட்டில் உள்ள பிரச்னைகள் தீர்க்கபட்டு கண்காணிபபுக் குழுக்கள் வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் அமைக்கபபட்டு ஒரு முழுமையான நிரந்தரமான போர் நிறுத்தம் உருவாக்கபபட வேண்டும்.

இரண்டாவதாக, பேச்சுவார்த்தையில் நாம் குறிப்பிட்டது போன்று மக்களின் சமூக- பொருளாதார வாழ்விற்கு அத்தியாவசியமான பொருட்களின் தடை நீக்கபபடவேண்டும். ஏற்கனவே தடை நீக்கபபட்ட பொருட்களுக்கு இராணுவம் மேற்கொள்ளும் கெடுபிடிகளை நீக்கி அந்தப் பொருட்கள் மக்களுக்கு இலகுவான முறையில் கிடைப்பதற்கான வழிகளை அமைக்க வேண்டும்.

### பாதை திறக்க வேண்டும்

மூன்றாவதாக ஒரு பாதை திறக்கப்பட வேண்டும். இங்கு உண்மையிலே அபிவிருத்தி, புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதெனக் கூறினால் இரண்டு முக்கிய விடயங்களை கருத்தில் கொள்ளவேண்டும். இங்கு பெருமளவில் புனர் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதினால் பெருமளவு பொருட்கள் தென்னிலங்கையிலிருந்து இங்கு கொண்டுவரபபடவேண்டும் கனரகஇயந்திரங்கள்உட்பட ஏகபபட்ட பொருட்கள் இங்கு கொண்டுவரப்படவேண்டும். அந்த ரீதியில் ஒரு பாதை அவசியம். கப்பல் மூலமாக இவற்றைக் கொண்டுவர முடியாது. எனவே ஒருபாதை அவசியம் இரண்டாவதாக எரிபொருள் அவசியம். உதாரணமாக யாழ்குடா நாட்டிற்கு ஒரு மாதத்திற்கு மட்டும் 12,000 பரல் டீசல் எரிபொருள் வழங்கத் தேவை. இந்த டீசல் தடை இருக்கும் போது இங்கு மின்சாரத்தை வழங்கவுள்ளதாக அரசு கூறுகிறது. இது நடைமுறைச் சாத்தியமானதல்ல.

### மக்கள் விழிப்பு வேண்டும்

என்னவென்றால் இரண்டு மூன்று சிறிய ஜெனரேற்றர்களை இங்குகொண்டுவந்து ஒரு சில வீதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படும். இதன்மூலம் வெளிநாடுகளுக்கு பிரசாரம் செய்ய அரசு முனைகிறது. இந்த விடயத்தில் எமது மக்கள் மிக விழிப்பாக இருக்க வேண்டும். அதாவது மக்களின் அன்றாடப் பிரச்னைகளாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அரசு நிராகரித்து விட்டு வெளிநாடுகளிடமிருந்து கடன் வாங்கி அதனை தான் எடுக்கும் நோக்கத்தில் சில ஏமாற்று நடவடிக்கைகளில் ஈடுபட முயல்கிறது-

### அரசு கூறுவது அபத்தம்

அதாவது சகஜநிலை, மோதல் தவிர்ப்பு முழுமையான யுத்த நிறுத்தமாக உருவாக்கப்படவேணடும். அதற்கே இன்னும் பேச்சுவார்த்தைகள் நடாத்தவேண்டும். போர் தவிர்ப்பை கண்காணிக்க மற்றுமொரு ஆவணம் தயாரிக்கப்படவேண்டும் என நாம் கேட்ட கோரிக்கை எல்லாவற்றையும் விட்டு விட்டு போர் நிறுத்தப் பிரச்னை தீர்ந்தது என அரசு கூறுவது அபத்தமானது. உண்மைக்கு மாறானது மற்றும் முழுமையானதும் மக்களுக்கு தேவையானதுமான பொருட்களை ஒரு இராணுவ பாவனைக்கு பயன்படுத்தும் பொருட்கள் என அரசு கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

மேலும் எமது மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு பல தடைகள் உள்ளன. இரவில் கடலில் கடற்படையினரின்தொல்லைகள் உள்ளன. இந்த தடைகள் இன்னமும் நீக்கப்படவில்லை. மற்றது அகதிகள் பிரச்னையாகும். இவையும் இன்னமும் நீக்கப்படவில்லை. அதுபற்றி அரசு இன்னும் வாயே திறக்கவில்லை. இப்படியெல்லாம அன்றாட பிரச்னைகள் இருக்க அரசு திடீரென ஒரு முடிவை எடுத்துள்ளது.

இந்த வாரம் அரச பிரதிநிதிகள் இங்கு வந்து இப்பிரச்னைகள் பற்றி தொடர்ந்து பேசி ஒரு நல்ல முடிவை எடுப்பார்கள் என எதிர்பார்த்திருந்தோம், ஆனால் எமக்கு ஏமாற்றம் கொடுக்கும் முறையில் அரசு இப்படியான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

### எம்மீது பழி

தற்போது அரசு தாங்கள் எல்லா பிரச்னைகளையும்தீர்த்து விட்டதாகவும் இங்கு புனர் நிர்மாண வேலைகளை மேற்கொள்ளவுள்ளோம். ஆனால் புலிகள் இதற்கு தடையாக இருக்கிறார்கள் என எம்மீது பழியை போடலாம் இந்த

(4ம் பக்கம் பார்க்க)

# நிறுவை அளவைகளுக்கு 28 முதல் முத்திரையிடல்

(கொழும்புத்துறை)

திருநெல்வேலி அபிவிருத்திச் சபை உப அலுவலகத்தில் இம்மாதம் 28-ம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 10ம் திகதி வரை இப்பகுதியில் உள்ள சந்தை வியாபார ஸ்தாபனங்களின் உரிமையாளர்கள் சகலரும் தத்தமது நிறுவை, அளவை உபகரணங்களை நேரில் கொண்டுவந்து முத்திரையிட்டுச் செல்லுமாறு யாழ். செயலக நிறுவைகள், அளவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் அறிவித்துள்ளார்

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முத்திரையிட்டுச் செலலத் தவறுபவர்கள் மீது திடீர் பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டால் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். 154-சி


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1994/95 கல்வி ஆண்டிற்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாக பதிவு 'செய்ய விருப்புடைய தகைமை பெறறவர்களிடம் இருந்து 1995 மார்ச் 1-ம் திகதி தொடக்கம் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கை நெறி
2. கலை முதற் கற்கை நெறி
3. பொதுக் கலைமாணி பகுதி I
4. சிறப்பு கலைமாணி பகுதி I
5. வர்த்தகமாணி பகுதி I

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி கற்கை நெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம் (இந்துநாகரீகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம, கிறிஸ்தவ நாகரீகம்)

விண்ணப்பப் படிவங்களுக்கு உரிய விபரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிநிலைப் பதிவு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ தபால் மூலமாகவோ 1995 மார்ச் 1ம் திகதி தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாக பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கியில் 50/- ரூபாய் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் இவற்றை பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தின் நிதியாளருக்கு எழுதப்பட்ட 50/- ரூபா காசுக்கட்டளை/தபால் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு. ரூபா 12/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ. அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்,

ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(ஏ.4801)

பொன்மொழி

புகழ் அடைவதற்கு சுருக்கமானதும், நிச்சயமானதுமான வழி, எவ்வாறு பிறர் மதிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அவ்வாறே உண்மையாக நடந்து கொள்வதே.
—சோக்ரடீஸ்

# வட— கிழக்கு புனரமைப்புக்கு 4000 கோடி ரூபாவை அரசு செலவிடும் என்பதில் சந்தேகம்

(யாழ்ப்பாணம்)
வடக்கு- கிழக்கு புனரமைப்புக்கென 4000 கோடி ரூபா அரசாங்கத்தால் செலவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இந்த நிதி வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படாததினால், இந்தத்திட்டம் நிறைவேற்றப்படுமோ? என்று மக்கள் மத்தியில் சந்தேகம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வரவுச் செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்படாத நிதியை அரசு செலவீனம் செய்வதில் பல முட்டுக்கட்டைகள் எதிர் நோக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை வடக்கு-கிழக்கு புனரமைப்பிற்கு பல கோடி ரூபா செலவிடப்படுவதாக அரசு கூறி வெளிநாட்டு நிதிகளை பெருமளவில் பெற்று இவ்வாண்டுக்கான பட்ஜட்டில் துண்டுவிழும்தொகையை சமாளிக்க முயற்சிப்பதாகவும் கொழும்புச்செய்திகள் கூறுகின்றன. ம-சி

## விண்ணப்பம் ஏற்கப்படும்

(யாழ்ப்பாணம்)
சாவகச்சேரி பிராந்தியத்துடன் இணைக்கப்பட்ட தொலைக்கல்வி ஆசிரியரின் சகல பிரிவினருக்குமான பொதுப்பரீட்சை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதி இன்று ஞாயிற்றுக்கிழமை ஆகும். இதற்கென தயாரிக்கப்பட்ட பரீட்சைத்திணைக்களத்தின் விசேடபடிவத்தை நிலையத்தில் பெற்று பூரணப்படுத்தி உடன் கையளிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

மேலும் விசேட செயலமர்வு இன்றும், நாளையும் நடைபெற இருப்பதால் சகல ஆசிரிய மாணவர்களும் போதனாசிரியர்களும் தவறாது சமூகமளிக்குமாறு சிரேஷ்டபோதனாசிரியர் திரு. மு. யோகராசா கேட்டுக் கொள்கின்றார்.

## நமது நோக்கு

### அறிவிப்புகள் பலன் தருமா?

பூநகரி, ஆனையிறவுப் பாதைகள் மக்கள் போக்குவரத்திற்குத் திறந்து விடப்படவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

உலகத்தின் கண்ணில் மண்ணைத் தூவும் நடவடிக்கையா என்று மக்கள் சந்தேகப்படமாட்டார்களா?

காரணம் என்ன? முன்னைய அரசு கூட இத்தகைய அறிவிப்புகளை அடிக்கடி வெளியிட்டது.

இது வெறும் அரசியல் வாண வேடிக்கை நிகழ்ச்சிகள் என்பதைப் பின்னர் மக்கள் உணர்ந்து கொண்டார்கள்.

கட்டம் கட்டமாகப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, ஒருதலைப் பட்சமாக அறிவிப்புகள் வெளிவருவதையிட்டு மக்கள் விழிப்பாகத்தான் இருக்கிறார்கள்.

உள்நோக்கத்தோடு மக்களைத் திசை திருப்பும் அறிவிப்புத்தானா எனக் கேள்வி எழக்கூடும் அல்லவா?

இந்த அறிவிப்பு பிரசார நோக்கத்தோடு மாத்திரம் தான் செய்யப்பட்டதா அல்லது மக்கள் நலனில் அக்கறையோடு செய்யப்பட்டதா என்று கூடக் கேட்கப்படும் அல்லவா?

ஏனெனில் —பாதைத் திறப்பு அறிவிக்கப்பட்டதும், அயல் நாட்டு வானொலி ஒன்று இதைச் செய்தியாகக்கூறியதோடு கருத்தும் கலந்து வெளியிட்டதை மக்கள் விளங்கிக் கொண்டார்கள்.

இராணுவ ஆக்கிரமிப்பு நிலைப்பாட்டில் பல கிலோ மீட்டர்கள் செல்ல வேண்டிய அரசு, சில மீட்டர்கள் மாத்திரம் சென்று, தீர்வைத் திணிக்க முற்படுவதாகவே கணிக்க வேண்டியிருக்கிறது.

ஏனெனில் —இங்குள்ள மக்கள் பல ஆண்டுகளாக இராணுவத்தினரின் கொடுமைகளுக்கு ஆளானவர்கள்.

அவர்களின் துன்ப துயரங்கள் துடைக்கப்பட வேண்டுமாயின், இராணுவம் பற்றிய பயம் போக்க வேண்டும்; வடுக்களை அகற்றவேண்டும்.

வடுக்களை அகற்றாது, பயத்தினைப் போக்காது, படையினரின் பார்வையிலேயே பாதை திறக்கப்பட்டதாக அறிவிப்புகள் வெளியிடுவது வெறும் நீர்க்குமிழியாகவே மாறிவிடும்.

எனவே —பழைய பாணியிலே சிந்தித்து, அறிவுப்புகளால் மாத்திரம் மக்களைக் கவர்ந்துவிடலாம் என 'யாரோ' சொன்ன ஆலோசனைகளை வைத்துக்கொண்டு செயற்படலாமா?

## பலதும் பத்தும்

### மீனியர் வியாதி

பலருக்குப் பல வேளைகளில் சங்கடம் தருவது ...தலைச்சுற்று! இது நோய் அல்ல ...நோயின் அறிகுறியே. உட்செவிக் கோளாறு, தலையில் காயம். எட்டாவது கபால நரம்பின் பாதிப்பு, இரத்தத்தில் சர்க்கரை குறைதல், புற்று நோய்க் கட்டி, வைரஸ் கிருமிப் பாதிப்பு, வெளிச் செவியில் குடும்பி, மருந்துகளின் பக்கவிளைவு, இரத்த அழுத்தம், புதிதாக அணிந்த சண்ணுடி, மிகையான மத... இப்படிப் பல காரணங்களால் தலைச்சுற்று ஏற்படுமாம்!

இதில் ஒன்று தான்... மீனியர் வியாதி. முள்ளெலும்பு தமனி நாள அடைப்பால் ஏற்படும் தலைச்சுற்றுப் பற்றி மீனியர் என்பவர் விபரித்ததால் இந்தப் பெயர் வந்ததாம்!

அதன் விசேட அம்சங்கள் என்ன? (1) விட்டுவிட்டுத் தோன்றும் செவிட்டுத் தன்மை (2) எப்போதாவது ஏற்படும் தலைச்சுற்று (3) காதிலே ஏற்படும் சப்த இரைச்சல். இதனால் குமட்டலும், வாந்தியும் ஏற்படுமாம்!

— மயூரன்

## இராசி பலன்

26—02—1995
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு மாசி —14)

துவாதசி முன்னிரவு 9.26 வரை; உத்தராடம் பின்னிரவு 1.11 வரை அமிர்தயோகம், இராகுகாலம் மாலை 4.59 முதல் 6.26 வரை சுபவேளை காலை 9.29 முதல் 10.59 வரை.

மேஷம்: முற்போக்கு சிந்தனை, பணவரவு, தியாகம்.
இடபம்; தீராத பிரச்னை, கருத்துவேறுபாடு, அலைச்சல்.
மிதுனம்: தொழில் குறைபாடு, மனசஞ்சலம், வெறுப்பு.
கடகம்: கல்வியாளர் தொடர்பு, கௌரவம், காரியசித்தி.
சிங்கம்: கலைத்துறைச் சிறப்பு, தொழில்லாபம் நண்பர் சகவாசம்.
கன்னி: உறவுச்சிக்கல், வார்த்தை அகங்காரம், குழப்பம்.
துலாம்: ஆரோக்கியக் குறைவு, மறதி, பயணத் தடை.
விருச்சிகம்; உறவினர் மகிழ்ச்சி, விருந்துண்ணல், புதியதிட்டம்;
தனுசு: மனைவி வேதனை, அகம்பாவம், பணமுடை.
மகரம்: களத்திரசுகம், பிறர் உதவி, மகிழ்ச்சிநிலை
கும்பம்: தொழில் எதிர்ப்பு, புத்திரர் கவலை, வேதனை.
மீனம்: எதிர்த்துப்பேசல், பதவி மாற்றம், புதிய அனுபவம்.

— ஜோஸ்யர்

பாகிஸ்தானில்

மரண தண்டனை விதிக்கப்பட்ட

# இருவரும் விடுதலை

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் இஸ்லாமிய மதத்தை நிந்தனை செய்ததாக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இரண்டு கிறிஸ்தவர்களை லாகூர் உயர்நீதி மன்றம் விடுதலை செய்துள்ளது.

சலாமத் மாசி என்ற பதினன்கு வயதுச் சிறுவனும் அவனது உறவினரான ரகமத் மாசி ஆகிய இருவருமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர். தீர்ப்பு வழங்கப்பட்ட நேரம் நீதிமன்றததைச் சுற்றி இஸ்லாமிய அடிப்படைவாதக்குழுக்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு நீதிமன்றத்தை நோக்கி கல் எறியத் தொடங்கினர்.

அடிப்படைவாதக் குழுவான இந்தக் குழு கிறிஸ்தவர்களைக் கொல்லப்போவதாகவும் எச்சரித்துள்ளனர். [ம-சி)

## சேவைக்கால பயிற்சி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் நல்லூர் கோட்டங்களுக்கான சங்கீத பாட நெறிக்கான சேவைக் காலப் பயிற்சியும் செயலமர்வும் மார்ச் 3ம், 4ம் திகதிகளில் யா/இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். -ம

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-02-26
ஞாயிறு இரவு

08-01 இசையரங்கம் நிகழ்ச்சியில் இசைக் கலைமணிஎஸ். துரைராஜா அவர்களின் தாளவாத்தியக் கச்சேரி.
08-30 செய்திகள்
08-40 தொடர் நாடகம் - கருணை ரவி எழுதும் ''காணிநிலம் வேண்டும்'' அங்கம் 01

1995-02-27
திங்கள் காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07 40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

தமிழீழ வானொலி
நிகழ்ச்சி நிரல்
1995—02-26
ஞாயிறு மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 மழலைகளுக்காக
05-30 கதம்பம்
06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
06-02 உங்கள் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)
சகல இந்துக்கோவில்களிலும் நாளை திங்கட்கிழமை சிவராத்திரி விழா வெகுசிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

0 0 0

(கொழும்புத்துறை)
கொழும்புத்துறை புங்கன் குளம் வீதி வில்வையம்பதி நாகபூஷணி அம்மன் கோவில் மகாசிவராத்திரி விழாவில் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் நான்கு ஜாமப்பூசை இடம் பெறும். மாலை 6 30 மணிக்கு பஜனை கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும். (154)

0 0 0 0

(நெல்லியடி)
புலோலி தெற்கு சந்தா தோட்டம் ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய மகா சிவராத்திரிவிழா நாளை திங்கட்கிழமை இரவு கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெறவிருக்கின்றது. (160)

0 0 0

[யாழ்ப்பாணம்)
கொட்டடி மத்தி, சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் நடாத்தும் சிவராத்திரி விரத விழா கொட்டடி நமசிவாய வித்தியசாலையில் திங்கள் மாலை 6 30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. (ம)

0 0 0 0

(அரியாலை)
யாழ்.பழைய பஸ் நிலையத்திலுள்ள ஸ்ரீ ஞான வைரவர் ஆலய சிவராத்திரி விழாவில் மேளக்கச்சேரி, பட்டி மன்றம் வில்லிசை கச்சேரி ஆகிய கலை நிகழ்ச்சிகளும் அபிஷேக ஆராதனைகளும் நடைபெறவுள்ளன. (59)

0 0 0 0

(யாழ்ப்பாணம்)
ஆவரங்கால் சிவன்தேவஸ்தான இந்து இளைஞர் மன்றம் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு சிவபுராண மனனப் போட்டி, சமய பொது அறிவுப்போட்டிகள் நடாத்தி வெற்றியீட்டியோர்க்கு பரிசில்களும் வழங்கவுள்ளனர். புலமைப் பரிசில் பரீட்சையிலும், முன்னேடிப் பரீட்சையிலும் இக்கிராமப் பாடசாலையில் சிறந்த முன்னணி மாணவர்க்கும் ஊக்குவிப்புப் பரிசில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

# இன்று

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலகத்தினல் நடாத்தப்பட்டுவரும் நடமாடும் செயலக சேவைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்டி சுழிபுரம் ஐக்கிய சங்கசைவ வித்தியாசாலையில் இடம் பெறும்.

0 0 0

(கொழும்புத்துறை)
யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ. து) யாழ், பிரதேசச் செயலர் பிரிவு பிராந்திய சபையின் பொதுச்சபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஊர்காவற்றுறைகொத்தணிப் பாடசாலை மண்டபத்தில் [யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி முன்பாக) நடைபெறும்.
-154

0 0 0

(யாழ்ப்பாணம்)
தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த ஆய்வரங்கும் பயிலரங்கும், இன்று மாலை மூன்று மணிக்கு ஆனைப்பந்தி உயர்கலைக்கல்லூரியில் நடைபெறும். இன்றைய ஆய்வரங்கில் தம்பு சண்முகம் மரபுவழிசோதிட சிந்தனைகள் என்ற பொருளில், ஆய்வுரை வழங்குவார். இடைநிலை வகுப்பை பி. இரத்தினசேகரும், உயர்நிலை வகுப்பை ஐ. வைத்தியநாதனும் நடாத்துவர்

0 0 0

(உடுவில்)
இணுவில் தர்மசாஸ்தா குருகுலம் நாடத்தும் வேத சிவாகம விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு இணுவில் காயத்ரீ பீடத்தில் நடைபெறவுள்ளது, சிவஸ்ரீ தா மகாதேவக்குருக்கள் தலைமையில் நடைபெறும், இவ்விழாவில் வேதங்கள் சிவாகமங்கள் பற்றிய சிறப்புரைகள் நினைவுப்பேருரைகள் இடம்பெறவுள்ளன. - 109

0 0 0

(நெல்லியடி]
புற்றளை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் செயற்குழுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவிருக்கின்றது. 169

0 0 0

(யாழ்ப்பாணம்)
வில்லூன்றி புனித தீர்த்தம் சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை இறைத்துத் துப்பரவு செய்யப்படுகிறது. கேணியில் பொருட்களைத் தவறவிட்டவர்களை நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளுமாறு பரிபாலனசபை கேட்டுக்கொள்கிறது.

தமிழ் மண்ணைக் காக்க விரைந்திடுவோம்
மரங்கள் காக்க எழுந்திடுவோம்

கப்பலில் எடுத்துவரப்பட்ட

# தடுப்பு ஊசிமருந்து

## பயன்படுத்தமுடியாத நிலை

[நெல்லியடி]

குளிரூட்டிப் பெட்டியின்றி கடுதாசிப் பெட்டியில் கப்பலில் எடுத்துவரப்பட்ட மந்திகை மருத்துவமனைக்குரிய சுமார் 84 ஆயிரத்து 400 ரூபா பெறுமதியான விசர்நாய்க் கடி டுப்பு ஊசி மருந்துகள், நோயாளர்களுக்கு பாவிக்க முடியாதமையினால் நாசமாகியுள்ளன.

இதுபற்றி பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவிக்கையில்: ஏற்கனவே மந்திகை மருத்துவமனையில் ஏ. ஆர். வி. தடுப்பு ஊசி மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவந்தது. இதனை ஓரளவாவது நிவர்த்தி செய்யும் நோக்கிலேயே இம் மருந்துகள் இங்கு எடுத்துவரப்பட்டன

குளிரூட்டிப் பெட்டியில் அடைத்து கொண்டுவரப்பட வேண்டிய ஏ. ஆர். வி ஊசி மருந்துகள் கடுதாசிப் பெட்டியில் வைத்து பாதுகாப்பற்ற நிலையில் கப்பலில் கொண்டு வரப்பட்டது

கப்பலில் எடுத்துவரப்பட்ட இம்மருந்துப் பெட்டிகளுக்கு குளிரூட்டியின்றி சூரியஒளியே கப்பலில் கிடைத்திருக்கின்றது. இதனால் இவை நாசமாகியுள்ளன. 160 ரி

# "அரைகுறை தீர்வு திட்டங்களை புலிகள் இயக்கம் ஏற்காது"

(யாழ்ப்பாணம்)

தீர்வுத் திட்டம் என்ற பெயரில் தமிழரின் தேசிய தனித்துவத்தைச் சிதைக்கும் அரைகுறைத் திட்டங்களை புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்ளமாட்டாது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப்புலிகள் (மாசி 1995) பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழரின் இனப்பிரச்னைக்கு தீர்வுத் திட்டம் ஒன்றை தயாரிக்கும்போது பின்வரும் விடயங்களை அரசு கட்டாயம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். முதலில் தமிழரின் பிரச்னையை ஒரு தேசிய இனப் பிரச்னையாகக் கருதவேண்டும். தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும்; தமிழ் மக்களின் தேசிய தாயக பூமியை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதேவேளை தமிழினத்திற்கு தேசிய சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை அங்கீகரித்து இவற்றின் அடிப்படையில் ஒரு தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசியம், தாயகம், தன்னாட்சி இம் மூன்று அரசியல் உரிமைகளும் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே 1985ம் ஆண்டு நடைபெற்ற திம்பு மாநாட்டிலிருந்து புலிகள் இயக்கம் முன்வைத்துவரும் அரசியல் கோரிக்கைகளாகும். அதை தற்போதைய அரசு கருத்தில் எடுக்கவேண்டும். இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் மாகாணசபை தீர்வுத் திட்டத்தை புலிகள் 1987ம் ஆண்டே நிராகரித்துள்ளனர் என்பதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும் 'விடுதலைப்புலிகள் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது; -ரி

சுழிபுரம்கடலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீது தாக்குதல் நடத்தினர். இதன்போது இரு மீனவர்கள் படுகாயமடைந்தனர். அவர்களது வலைகள் கடற்படையினரால் வெட்டி அறுக்கப்பட்டன. இரு மீனவர்கள் கடலில் பாய்ந்து தப்பினர்.

சூசைப்பிள்ளை மகாலிங்கம் (46-வயது), இராசையா கணேசமூர்த்தி (36 - வயது) ஆகியோரே படையினரின் தாக்குதலில் படுகாயமடைந்தனர்.

கடந்த வாரம் இருவர் காரைநகர் முகாமிற்கு பிடித்துச் செல்லப்பட்டு அங்கு கடுமையாக தாக்கப்பட்டனர்.

சுழிபுரம் கடற்பகுதிக்கு வரும் கடற்படையினர் மீனவர்களை விரட்டுவதாகவும் பிடித்த மீன்களை பறித்துச் செல்வதாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். -ரி

வெளிநாட்டு உதவி

(1ம்பக்கத் தொடர்ச்சி)

கும் நாடுகளின் கூட்டத்தில் வடக்கு—கிழக்கில் இவையெல்லாவற்றையும் ஆரம்பித்துவிட்டோம் எனக் கூறி பெருமளவு நிதியை பெற்று அதன்மூலம் ஏமபற்று வேலை ஒன்றில் ஈடுபடவே அரசு முனைகிறது.

ஒவ்வொரு வருடமும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறும் போதெல்லாம் அரசு இப்படிக் கூறி மக்களையும் அந்நாடுகளையும் ஏமாற்றி பல கோடி ரூபா நிதியுதவியை பெற்று வந்துள்ளன. அதன் ஒரு கட்டமாகவே இந்த அரசும் ஏமாற்று வேலைகளில் ஈடுபடுகிறது.

முன்பும் இப்படி உதவிவழங்கும் நாடுகளிடம் பெருமளவு நிதியை பெற்று ஆயுதக் கொள்வனவிற்கும் படைகளின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கும், சிங்களக் குடியேற்றங்களுக்கும் தான் அவை செலவிடப்பட்டுள்ளதும் தெரிந்ததே எனவும் குறிப்பிட்டார். -சி-ரி

காமினி கொலை விவகாரம்

# கொலையாளிதலைசிதைந்ததால் விசாரணையில் பெரும் பாதிப்பு

## இந்திய குழு தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸநாயக்காவின் கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு இலங்கை வந்துள்ள இந்தியாவைச் சேர்ந்த ஐவர் கொண்ட துப்பறியும் ஆய்வாளர் குழு இப்படுகொலைச் சூத்திரதாரியென நம்பப்படும் பெண்ணின் தலையை பரிசோதனை செய்தது-

தலை சிதைவுற்று இருப்பதால் விசாரணையின் சகல அம்சங்களையும் அது பாதித்திருப்பதாக இந்திய துப்பறிவாளர்கள் தெரிவித்தனர்.

இவர்கள் திருமதி சிறிமா திசநாயக்காவையும் சந்தித்து பேச்சு நடத்தினர். காமினி கொலை தொடர்பாக இது வரை இரகசியப் பொலிசார் நடத்திய விசாரணைகள் குறித்தும் இந்திய அதிகாரிகள் திருப்தி தெரிவித்தனர்.

ஐவர் கொண்ட இந்தக் குழுவினர் காமினி கொலை தொடர்பாக முக்கியத்துவம் மிக்க மூன்று அறிக்கைகளையும் அத்தியாவசியமிக்க சில தஸ்தாவேஜுகளையும் குற்றத் தடுப்பு பிரிவிடமிருந்து பெற்றுக்கொண்டனர். -ரி

### திறந்த பல்கலைக்கழக கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகம் சிறு வணிக முகாமைத்துவம் (94 95) கற்கை நெறிக்கான நாள் வகுப்பு இன்று ஞாயிறு காலை 8-30 மணிக்கு நடைபெறும். இதேவேளை பட்டமேற்கல்வி டிப்புளோமா (94/95) கற்கை நெறிக்குப் பதிவு செய்த சகல மாணவர்களும் பாட நூல்களையும், ஒப்படை விளுக்களையும் இன்று நண்பகல் 1 மணிக்கு மாணவர் பதிவு புத்தகத்துடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

### நரேமா கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)

நரோயா கப்பலில் நாளை 27ம் திகதி செல்வதற்காக ஆசனம் பதிவு செய்தவர்கள் அன்று காலை 8-00 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்திற்கு தவருது சமூகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர். -ரி

# பாதிக்கப்பட்டோர் விபரங்கள் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

1983க்குப் பின் வன்செயல்களால் பாதிக்கப்பட்டு, தென்மராட்சிப் பகுதியில் வதியும் மக்களின் விபரம் திரட்டல், கீழ்வரும் நாட்களில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் காலை 9-30 மணி தொடக்கம் திரட்டப்படவுள்ளன.

இன்று 26ம் திகதி கே/ 344- தவருளை, இயற்றுளை. பெப். 28 ஜே/337- குடமியன். மார்ச் 01 ஜே 328- கொடிகாமம் தெற்கு, மார்ச் 2 ஜே/ 338- நாவறகட்டு, மார்ச 3 ஜே/334- எழுதுமட்டுவாள் வடக்கு, மார்ச் 4 ஜே/334- எழுதுமட்டுவாள் வடக்கு, மார்ச் 7 ஜே/342- கரம்பகுறிச்சி, மார்ச் 9 ஜே/339- வரணி வடக்கு, மார்ச் 10 ஜே/340 மாசேரி, மார்ச் 11 ஜே/327 கொடிகாமம் மத்தி, மார்ச் 16 ஜே/ 336- மிருசுவில் தெற்கு, மார்ச் 17 ஜே/ 346- மிருசுவில் மேற்கு.

மேற்கூறப்பட்ட நாட்களில் பாதிக்கப்பட்டோர் தமது விபரங்களை பதிந்துகொள்ளுமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கேட்டுள்ளது. ரி

ஊழல் குற்றச்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவத்துக்குத் தேவையான ஆயுதங்கள் எலக்ரோனிப பொருட்கள் இராணுவத்திலுள்ள சபையால மிகவும் இரகசிய முறையில் கொள்முதல் செய்யபபட்டயாகும். விசாரணையின்போது இதன் உண்மைகள் நன்று தெரியவரும் என்ருர். ம-சி

### வீட்டினுள் புகுந்து 16 பவுண் நகை கொள்ளை

(நெல்லியடி]

வீட்டிலுள்ளோர் உறங்கிய வேளை வீட்டினுட் புகுந்த திருடர் கோஷ்டி, சூட்கேசில் வைக்கப்பட்டிருந்த சுமார் 16 பவுண் நிறையுள்ள தங்க நகைகளை கொள்ளையடித்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளது.

இத்துணிகர சம்பவம் கடந்த 6-ம் திகதி நள்ளிரவு நெல்லியடி பிரதான வீதியிலுள்ள செபமாலை லூர்த்து நேசன் என்பவரின் வீட்டில் நிகழ்ந்துள்ளது.

இது குறித்து பருத்தித்துறை காவல் பணிமனையில் புகாரிடப்பட்டுள்ளது. திருட்டுக் கோஷ்டியை கைது செய்ய காவல் துறையினர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். [160 - சி)

# 150 அடி தண்ணீர்தாங்கியில் ஆசிரியர் உண்ணாவிரதம்!

(கொழும்பு)

புத்தளத்தில் 150 அடி உயர தண்ணீர் தாங்கியில் நேற்று முன்தினம் காலை ஏறிய முஸ்லிம் ஆசிரியர் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கப் போவதாக தெரிவித்தார்.

வன்செயலின் விளைவாக இடம்பெயர்ந்த ஏழு முஸ்லிம் ஆசிரியர்களுக்கு 14 மாதங்களாக சம்பளம்எதுவும் வழங்கப்படவில்லை என்பதைக் கண்டித்தே அவர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

இந்த ஆசிரியரின் 'உண்ணாவிரதத்தை அடுத்து சம்பளம் வழங்கப்படாத முஸ்லிம் ஆசிரியர்களுக்கு தலா 5000 ரூபா வீதம் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. இதன் பின்னர் அவரது உண்ணாவிரதம் கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ரி

பூநகரி முகாமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டோம் என்ருர்.

இதேவேளை திரு. பாலபத்த பெண்டி அனுப்பிய கடிதத்தில் நாலாம் கட்டபேச்சு குறித்து அவர் எதுவும் குறிப்பிடவில்லை எனவும் தமிழ்ச் செல்வன் தெரிவித்தார். சி ரி

பொய்ப்பிரசார

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கத்திலேயேஇப்படியான காரியங்கள் செய்யப்படுகின்றன என்பதும் எமக்கு தெரியும்.

புனர் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு அரச அதிபர், மாநகர ஆணையாளருக்கு அரசு பணித்துள்ள போதும் அவர்களும் அவற்றைத் தொடங்க முடியாத தொரு சூழ்நிலையிலுள்ளனர். ஏனென்ருல் அதற்கான வழிவகைகள் இல்லை. வீதி திருத்த தாரோ கனரக வாகனங்களோ இன்றி அவர்களும் வேலைகளை தொடங்கமுடியாத நிலையிலுள்ளனர் இவையெல்லாவற்றையும் அரசு பெரிய பிரசார ரீதியாக செய்து கொண்டிருக்கிறதேயன்றி இங்கு எவ்வித வேலையும்நடைபெறுவதற்கான சூழ்நிலையை அரசு உருவாக்கவில்லை என்ருர். -சி-ரி

### இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலயத்திற்கான கரபந்தாட்ட சங்கம், வலைப்பந்தாட்ட சங்கம் என்பவற்றின் ஆரம்பக் கூட்டம் இன்று 26ம் திகதி காலை 10-00 மணிக்கு சாவகச்சேரி றிபேக்கல் ஹாரியில் நடைபெறவுள்ளது. -ரி

பாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளப்படவுள்ளது,

நாட்டின் பாதுகாப்புதுறையில் மேலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள் ளன. இது ஓர் முன்னேடி நடவடிக்கையாகும் என்று கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன. -ரி

இலங்கை அகதிகளின்

# 170 படகுகளும் இருப்பி ஒப்படைக்கப்படும்

(கொழும்பு)

தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் அகதிகளின் 170 படகுகள் விரைவில் கையளிக்கப்படும் என்று இந்திய வருமான புலனாய்வுப் பணிப்பாளர் நாயகம் பி. கே. அகழ்வார் தெரிவித்தார்.

இலங்கை சுங்க திணைக்களம் ஒழுங்கு செய்துள்ள போதைவஸ்துக் கடத்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய விடயம் குறித்துப் பேச்சு வார்த்தை நடத்த இலங்கை வந்துள்ள திரு. அகழ்வார் பத்திரிகையாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். -ரி

இந்திய

1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் பிரிவுகளில் கொல்லப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை இந்த ஏழு உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் பார்க்க அதிகமாகும் என்று தெரியவருகிறது.

ஏனைய உதவி அரச அதிபர் பிரிவுகளில் கொல்லப்பட்ட மாணவர்களின் விபரங்களை திரட்டும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-